# ACHIEVERS



திரு எஸ் ரமேஷ்
**Mr S Ramesh**

சமூக வளர்ச்சி, இளையர், விளையாட்டுத்துறை அமைச்சின் (எம்.சி.ஒய்.எஸ்) மதிப்புமிக்க எம்.சி.ஒய்.எஸ் தோழர் விருது 2005 பெற்றிருக்கும் திரு எஸ் ரமேஷுக்கு, இந்த அறக்கட்டளை வாரியம் தனது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவிக்கிறது. அமைச்சின் கீழ்செயல்படும் குழுக்களிலும் திட்டங்களிலும் மிகச் சிறந்த சேவையாற்றியிருக்கும் தனி நபர்களுக்கும், நிறுவனங்களுக்கும் சமூக வளர்ச்சி, இளையர், விளையாட்டுத்துறை அமைச்சு இந்த விருதை வழங்கி வருகின்றன.

மீடியாகார்ப் செய்திப் பிரிவின் மூத்த தொலைக்காட்சி செய்தியாளராக பல மணி நேரம் தம் பணியில் திரு ரமேஷ் செலவிட்டாலும், அவர் ஓய்வு நேரத்தையும் ஆலய நடவடிக்கைகளில் உதவுவதில் பங்காற்றியிருக்கிறார். தற்போது, இந்து ஆலோசனை மன்றத்தின் உறுப்பினராக இருக்கும் திரு ரமேஷ், கடந்த சுமார் பத்து ஆண்டுகளாக ஆலய நிர்வாகக் குழுக்களில் சேவையாற்றியிருக்கிறார்.

இந்து சமயத்தை விரிவாக அறிந்து வைத்திருக்கும் திரு ரமேஷ், இந்து அறக்கட்டளை வாரியத்தின் ஆலயங்களின் பிரதான விழாக்களை மிகப் பெரிய அளவில் ஏற்பாடு செய்வதில் முக்கிய பங்கை ஆற்றியிருக்கிறார். ஆலயங்களுக்கு வெளிநாட்டிலிருந்து அர்ச்சகர்களையும், சமய ஊழியர்களையும் வேலைக்கு அமர்த்தும் மன்றத்தின் செயல்பாட்டுக்குத் திரு ரமேஷ் பங்கு மிக முக்கியமானதாகும். இந்து அறக்கட்டளை வாரியம், ஆலயங்கள் ஆகியவற்றின் நிதித் திரட்டு நடவடிக்கைகளுடன், வருடாந்திர இந்து விழாக்கள் அட்டவணையைத் தொகுத்து வழங்குவதிலும் திரு ரமேஷ் பல்லாண்டுகாளமாகப் பங்காற்றி வந்திருக்கிறார்.

The Hindu Endowments Board congratulates Mr S Ramesh for receiving the prestigious 2005 Friend of MCYS Award. The Ministry of Community Development, Youth and Sports (MCYS) presents the award to individual volunteers or organizations which have made significant contributions to committees or projects under the purview of the Ministry.

Despite a heavy schedule as a senior broadcasting journalist with MediaCorp News, Mr Ramesh has dedicated his personal time to assist with temple activities. Presently a member of the Hindu Advisory Board, Mr Ramesh has in the last decade served on the temple management committees of various temples.

Mr Ramesh's comprehensive understanding of Hinduism has helped him play a key role in organizing large scale prayers as well as major festivals at all Board administered temples. His involvement encompasses support in the recruitment and appointment of foreign priests and religious workers, fund raising initiatives, as well as the compilation and publication of the annual Hindu Festivals Calendar.

மதிப்புமிக்க சேவை விருது பெற்றிருக்கும் திரு எஸ் லட்சுமணனுக்கு இந்து அறக்கட்டளை வாரியம் தனது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவிக்கிறது. போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளில் மிகச் சிறந்த சேவையாற்றியிருக்கும் தனி நபர்களுக்கும், நிறுவனங்களுக்கும் உள்துறை அமைச்சும், மத்தியபோதைப் பொருள் ஒழிப்புப் பிரிவும் இணைந்து இந்த விருதை வழங்கி வருகின்றன. திரு எஸ் லட்சுமணன், “ஆஷ்ரம்” நிர்வாகக் குழவின் தலைவர். 1999ம் ஆணிடில் நிருவப்பட்ட ஆஷ்ரம், சிங்கப்பூர் இந்தியர்களுக்கான ஒரே போதையர் மறுவாழ்வு இல்லம். இந்து அறக்கட்டளை வாரியத்தால் நிர்வகிக்கப்பட்டும் இந்த நிலையம், சுமார் 200 முன்னாள் போதையருக்குச் சுய மேம்பாடு, குடும்ப உறவைவளர்த்தல், ஆன்மீக மேம்பாடு, வேலை வாய்ப்புகள் ஆகியவற்றின் மூலம் மறுவாழ்வுத் திட்டங்களை நடத்தி வருகிறது.

தீவிரத் தொண்டூழியரான திரு லட்சுமணன், அந்தப் போதையர் மறுவார்வு இல்லத்தின் திட்டங்களை வகுப்பதிலும் அவற்றை மேம்படுத்துவதிலும் தமது பெரும்பாலான நேரத்தை அர்ப்பணித்திருக்கிறார். சிண்டா எனப்படும் சிங்கப்பூர் இந்திய மேம்பாட்டுச் சங்கத்தின் குடும்பச் சேவை நிலையத்தின் நிர்வாகக் குழுவிலும் அங்கம் வகிக்கிறார் திரு லட்சுமணன். அந்தச் சேவை நிலையம் போதைப் பித்தர்கள் உட்பட பிரச்னையுள்ள இந்தியக் குடும்பங்களின் விலகாரங்களைத் தீர்த்து வைப்பதில் உதவி வருகிறது.

The Hindu Endowments Board congratulates Mr S Lakshmanan for receiving the esteemed Meritorious Service Award. The Ministry of Home Affairs, together with the Central Narcotics Bureau presents the award to outstanding individuals and organizations for their enthusiastic contributions to the struggle against drugs.

Mr S Lakshmanan is Chairman of The Ashram's Management Committee. The Ashram, established in 1999 is the only halfway house for Indians in Singapore. Administered by the Hindu Endowments Board, it has rehabilitated close to 200 drug inmates through a residential programme that includes self-enhancement, family relationship building, spiritual development and job placement opportunities.

As an ardent volunteer, Mr Lakshmanan has devoted much of his time to developing and implementing the halfway house programme, raising funds to sustain its operation and securing work for the halfway house residents. He also serves on the Management Committee of the Singapore Indian Development Association (SINDA) Family Service Centre, which helps dysfunctional Indian families, including the families of drug offenders.



**திரு எஸ் லட்சுமணன்**
**Mr S Lakshmanan**